FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru
6th Term Examination - 2022

வணிகக்கல்வி - I Business Studies - I	Two Hours Gr. 13 (2022)	32	T	I

அறிவுறுத்தல்கள்
- எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தளிலேயே விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில உமது சுட்டெண்ணை தெளிவாக எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் :……………………

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

வினா இல.	புள்ளிகள்
01 – 30	
31 – 50	
மொத்தம்	

01) வணிகப்பரம்பல் தொடர்பாக ஐந்து மாணவர்களின் கூற்றுக்கள் வருமாறு

A – மிகை உற்பத்தியினை மற்றுமோர் மிகை உற்பத்தியுடன் பரிமாற்றம் செய்தல் பண்டமாற்று என்பதாகும்.

B – மிகை உற்பத்தி காரணமாகவே சிறப்புத்தேர்ச்சி ஏற்பட்டது.

C – பண்டமாற்று முறையே வணிகப்பரம்பலின் முதலாவது படியாகும்.

D – பண்டமாற்று முறையின் குறைபாடே நேரில் உற்பத்திக்கு வித்திட்டது.

E - இன்று வரையான இலத்திரனியல் வர்த்தகத்தின் தொடக்கம் பண்டமாற்று என்றே கருதமுடியும்.

மேற்படி மாணவர்களின் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்றுக்களினைக் கொண்ட தொகுதி யாது?

(1) A, B C (2) C, D, E (3) A, C, E
(4) B, C, D (5) A, B, D (……..)

02) வணிகங்களை பல்வேறு நியதிகளின் கீழ் வகைப்படுத்திவிட முடிவதுண்டு இதன்படி அட்டவணை x இல் தன்மை அடிப்படையிலான கூறுகளும், அட்டவணை y இல் அவற்றின் விபரணங்களும் காட்டப்பட்டுள்ளன.

x	y
A. முதன்னிலை உற்பத்தி	1. இயற்கையின் அருங்கொடையாக கிடைப்பவை
B. இரண்டாம் நிலை உற்பத்தி	2. பாதுகாப்பு மற்றும் சமூகப்பணிகள் அடங்கும்
C. மூன்றாம் நிலை உற்பத்தி	3. முதன்னிலை உற்பத்தியின் வெளியீடுகள் இதில் உள்ளீடுகளாக்கப்படும்
	4. சகல தொட்டுனரமுடியாத பணிகளும் அடங்கும்
	5. எதுவிதமாற்றமுமின்றி அவ்வாறே உற்பத்திக்கு பயன்படுத்த முடியும்.
	6. பெரும்பாலும் உற்பத்தி அல்லது நிர்மாணம் சார்ந்ததாக இருக்கும்

x இற்கும் y இற்கும் பொருத்தமான இணைப்பினை தெரிவு செய்க.

(1) A – 4, 6, B – 2, 5, C - 1, 3
(2) A – 2, 6, B – 3, 5, C - 1, 4
(3) A – 3, 5 B – 1, 6 C – 2, 4
(4) A - 5, 6 B – 2, 3 C – 1, 4
(5) A – 1, 5 B – 3, 6 C – 2, 4 (……..)

03) மாற்றமுறும் தற்போதைய வணிகச் சூழல் நிலைமைகள் தொடர்பிலான சில கூற்றுக்கள் வருமாறு

(1) பொதுவாக 60 வயதிற்கு மேற்பட்டோர் யாவரும் Covid தடுப்பூசியினை பெற்றுள்ளனர்

(2) Covid தொற்று நிலைமையினைத் தொடர்ந்து இணைய வலையமைப்பு சேவைகள் பாரியளவில் விரிவடைந்துள்ளன.

(3) Covid தொற்று நிலைமை ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டதனைத் தொடர்ந்து சமூகமட்ட நிகழ்வுகளுக்கான தடைகள் தளர்த்தப்பட்டுள்ளன.

(4) தற்போதைய எரிபொருள் நெருக்கடிகளினைத் தொடர்ந்து வணிகங்களுக்கான வாடிக்கையாளர்களின் வருகை பெருமளவு குறைவடைந்துள்ளது.

(5) கடந்த சில மாதங்களாக பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்துச் சென்றுள்ளன.

மேற்தரப்பட்ட கூற்றுக்களில் ஒருகூற்று வணிகச்சூழல் வகைகள் தொடர்பில் வேறுபட்டு காணப்படுகின்றது. அவ்வாறு வேறுபட்டு காணப்படும் கூற்று எது?

(1) கூற்று 1 (2) கூற்று 2 (3) கூற்று 3 (4) கூற்று 4 (5) கூற்று 5 (……..)

04) உற்பத்திகளின் போது உள்ளீட்டு பெறுமதியும், வெளியீட்டுப் பெறுமதியும் கணிப்பிடப்படுவது பின்வருவனவற்றுள் எதற்காகவாகும்.

(1) மொத்த இலாப கணிப்பீட்டின் போது

(2) பெறுமதி சேர் வரிக் கணிப்பீட்டின் போது

(3) மூலப்பொருட்களுக்கான கிரயக்கணிப்பீட்டின் போது

(4) உற்பத்தி வரிக் கணிப்பீட்டின் போது

(5) வருமானவரிக் கணிப்பீட்டின் போது (……..)

05) சமூகங்கள் தொடர்பில் வணிகங்கள் நிறைவேற்ற வேண்டிய சில பணிகள் வருமாறு. இவற்றில் வணிக ஒழுக்க விழுமிய பணியொன்றாக எதனை நீர் கருதுகின்றீர்.

(1) கலாச்சாரங்கள் பெறுமானங்களுக்கு மதிப்பளித்தல்

(2) வேலைவாய்ப்பிற்குப் பங்களிப்புச் செய்தல்.

(3) வரி செலுத்துகையை சரியாக மேற்கொள்ளல்.

(4) சூழலை நேசிப்பவராக கருமமாற்றுதல்.

(5) சமூக நலன்புரிச் சேவைகள். (……..)

06) பெருமளவு உற்பத்திப் பொருட்களில் இருந்து தெரிவினை மேற்கொள்வதற்கு நுகர்வோர் பின்வருவனவற்றுள் எதிலிருந்து கொள்வனவினை மேற்கொள்ளமுடியும்.

(1) சில்லறை வியாபார நிலையங்களிலிருந்து

(2) மொத்த வியாபார நிலையங்களிலிருந்து

(3) இணையவழி சந்தைகளிலிருந்து

(4) சிறப்பு சந்தைகளிலிருந்து

(5) நடமாடும் சில்லறை விற்பனையகங்களிலிருந்து (……..)

07) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான இரு கூற்றுக்கள் வருமாறு

கூற்று A- வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பது வணிகமொன்று பொருளாதாரம் நிலைபேறானது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் கருமமொன்றாகும்.

கூற்று B- மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் என்பது வணிகமொன்று சமூக கலாச்சாரம் நிலைபேறானது என்பதை உறுதி செய்வதற்கு கவனம் செலுத்தும் விடயமொன்றாகும்.

மேற்படி இரண்டு கூற்றுக்களிலும்

(1) இரண்டு கூற்றுக்களுமே சரியானவை

(2) இரண்டு கூற்றுக்களுமே தவறானவை

(3) கூற்று A சரியானது, கூற்று B தவறானது

(4) கூற்று A தவறானது, கூற்று B சரியானது

(5) Aயும், Bயும் சரியானது என்பதுடன், A யினூடாக B விபரிக்கப்படுகின்றது. (……..)

08) பின்வரும் வணிக வகைகளுள் தனியார் துறைக்குரிய பொறுப்பு வரையறுக்கப்படாத, சட்ட ஆளுமையற்ற, தனியொருவரால் ஆரம்பிக்கப்பட முடியாத வணிக அமைப்புக்கு உதாரணமாக நீர் எதனைக் கருதுகின்றீர்?
(1) இரத்தினா ஸ்ரோஸ்
(2) ஜெஸ்லி அன்ட் டயானா கம்பனி
(3) பாவற்குளம் பலநோக்கு கூட்டுறவு சங்கம்
(4) ரிஷி கம்பனி லிமிட்டெட்
(5) லக்ஷ்மி நாராயணன் பினான்ஸ் கம்பனி (PLC) லிமிட்டெட் (……..)

09) பின்வரும் கூற்றுக்களிலிருந்து ''முயற்சியாளர்'' எனும் எண்ணக்கரு தொடர்பில் மிகப் பொருத்தமான கூற்றினை தெரிவு செய்க.
(1) பாலா வெளியிடப்படும் வெளியீடுகளில் சிறுசிறு தவறுகளை தேடியறிந்து பிரச்சாரப்படுத்தலில் ஈடுபடுபவர்.
(2) ராஜ் புதிய விடயங்களை தேடியறிவதில் ஆர்வம் கொண்டிருந்த போதிலும் அதனை பெறுமதியுடையதாக்குவதில் அனுபவம் போதாதிருந்தது.
(3) தீபன் சந்தைகளை மிக உன்னிப்பாக அவதானிப்பதுடன் நல்ல விடயங்களை பாராட்டியும் சில தவறுகளை சுட்டிக்காட்டியும் வருவார்.
(4) கேசன் புதிய விடயங்களை உள்வாங்கி மாணவர்கட்கு ஏற்ற வகையில் சிறப்பாக வடிவமைத்து வழங்குகின்றார்.
(5) ராஜா சகல துறைகளிலும் பிரவேசித்துள்ளார் எனினும் குறிப்பிட்டுக் கூறக் கூடியளவுக்கு சந்தைகளை கைப்பற்றவில்லை. (……..)

10) ஆனோல்ட் என்பவர் தான் செலுத்த வேண்டிய தொகைக்காக அட்சயன் என்பவரது பெயரில் காசோலை ஒன்றினைப் பிறப்பித்து வழங்குகின்றார். அட்சயன் அக்காசோலையில் பாதுகாப்பு கருதி ''கைமாற்றத்தகாதது'' என்ற வாசகத்துடன் கூடிய குறுக்குக்கோட்டினை இட்டு தான் பணம் செலுத்த வேண்டிய ஆகாஷ் என்பவருக்கு புறக்குறிப்பிட்டு வழங்குகின்றார். ஆகாஷ் இக்காசோலையின் முகப்பில் உள்ள வங்கிக் கரும பீடத்தில் பணமாக்குவதற்காக சமர்ப்பிக்கின்றார்.

மேற்படி காசோலை பரிமாற்றத்துடன் தொடர்புபட்டுள்ள பொருத்தமற்ற செயற்பாடெனக் கருதப்படக் கூடியது எது?
(1) ஆனோல்ட் என்பவர் அட்சயனது பெயரில் காசோலையினை பிறப்பித்துள்ளமை.
(2) பெறுனர் ஆகிய அட்சயன் குறுக்குக்கோட்டினை காசோலையில் இட்டமை.
(3) கைமாற்றத்தகாதது என்ற குறுக்குக்கோடிட்ட காசோலையினை ஆகாஷ் என்பவருக்கு புறக்குறிப்பிட்டு வழங்கியமை.
(4) அட்சயனது பெயரில் எழுதப்பட்ட காசோலையினை ஆகாஷ் என்பவருக்கு வழங்கியமை.
(5) ஆகாஷ் காசோலையின் முகப்பில் உள்ள வங்கி கரும பீடத்தில் பணமாக்குவதற்கு சமர்ப்பித்தமை. (……..)

11) உற்பத்தி வணிகமொன்றில் தோன்றக்கூடிய இடர்கள் சில X அச்சிலும், அவ்விடர்களுக்கு மேற்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்த வகைகள் Y அச்சிலும் காட்டப்பட்டுள்ளன.

X	Y
A. தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகை போக்கியூடான புகை காரணமாக சுற்றியுள்ள மக்களுக்கு சுவாசநோய் ஏற்படல்.	1. விரிவான காப்புறுதி ஒப்பந்தம்.
B. ஊழியர்கள் தொழிற்சாலையில் விபத்துக்களுக்கு உள்ளாதல்.	2. உற்பத்திப் பொறுப்புக் காப்புறுதி
C. தொழிற்சாலைக்கு அருகில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிருத்தல்.	3. பொதுப் பொறுப்புக் காப்புறுதி
D. முடிவுப் பொருட்களை வாகனங்களின் உதவியுடன் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லல்.	4. தீ அபாயக் காப்புறுதி
E. உற்பத்திப் பொருட்களினால் வாடிக்கையாளருக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் நுகர்வோர் சங்கமொன்று விழிப்பாக இருத்தல்.	5. ஊழியர் பொறுப்புக் காப்புறுதி

X இற்கும், Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A – 1, B – 3, C - 5, D – 2 E – 4
(2) A - 2, B – 1, C - 3 D - 4, E - 5
(3) A – 3, B - 5, C – 4, D – 1 E – 2
(4) A – 4, B – 2, C – 1, D – 3, E – 5
(5) A – 5, B – 4, C – 2, D – 1, E – 3 (……..)

12) தொடர்பாடல் தொடர்பிலான இரு கூற்றுக்கள் வருமாறு.

கூற்று A - பிரச்சினைகளை மிக விரிவாக முன்வைத்து கலந்துரையாடுவதற்கு, வாய்மொழி மூல தொடர்பாடல் பெருமளவு துணைபுரிவதுண்டு.

கூற்று B - எழுத்து மூலமாக தகவல்களை தொடர்பாடல் செய்யும் போது, பயன்படுத்தும் சொற்களினால் கருத்துக்கள் திரிவுபடுத்தப்படுவதில்லை.

மேலே தரப்பட்ட இரண்டு கூற்றுக்களிலும்

(1) கூற்று A சரியானது என்பதுடன் கூற்று B தவறானது.
(2) கூற்று A தவறானது என்பதுடன் கூற்று B சரியானது.
(3) கூற்று A மற்றும் கூற்று B ஆகிய இரண்டுமே சரியானவை.
(4) கூற்று A மற்றும் கூற்று B ஆகிய இரண்டுமே தவறானவை.
(5) இரண்டு கூற்றுக்களுமே ஒரே கருத்தினையே வலியுறுத்துகின்றன. (……..)

13) பூகோள இடை நிலைப்படுத்தல் முறைமையை (Global Positioning System – GPS) பயன்படுத்துவதன் மூலம் பொருட்களுக்கான போக்குவரத்தின் போது, வணிகர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய அனுகூலமாக கருத முடியாதது பின்வருவனவற்றுள் எது?

(1) குறுகிய தூரப் பாதையை அறியக்கூடிய ஆற்றல்.
(2) பயணிக்கவுள்ள தூரத்தை அறியக்கூடிய ஆற்றல்.
(3) கிரயங்களை தீர்மானிக்கக் கூடிய ஆற்றல்.
(4) பாதையில் தோன்றியிருக்கக்கூடிய தடைகளை அறியக்கூடிய ஆற்றல்.
(5) வாகனம் எவ்விடத்தில் நிற்கின்றது என்பதை அறியக்கூடிய ஆற்றல். (……..)

14) சந்தை ஆய்வு, உற்பத்தி செய்வதா அல்லது கொள்வனவு செய்வதா, கிரயங்களை எவ்வாறு இழிவுபடுத்திக் கொள்வது, வழங்கல் சங்கிலியினை தொடர்ச்சியாக பேணிச் செல்லுதல் ஆகிய கருமங்கள் யாவற்றிற்கும் மிக முக்கியமான செயற்பாடாக கருதப்படக் கூடியது பின்வருவனவற்றுள் எதுவாகும்.

(1) தொடர்பாடல்
(2) களஞ்சியப்படுத்தல்
(3) போக்குவரத்தும் வழங்கல் சேவையும்
(4) உற்பத்தியும் தரப்படுத்தலும்
(5) விற்பனையும், மேம்படுத்தலும் (……..)

15) வெளிநாட்டு வியாபாரத்தின் போது, பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களில் சில X நிரலிலும் அவை பயன்படுத்தப்படுவதற்கான காரணங்கள் Y நிரலிலும் தரப்பட்டுள்ளன.

X	Y
A. உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்	1. சுங்கத்தினால் பொருட்கள் பொறுப்பேற்கப்பட்டமையினை உறுதிசெய்ய
B. நட்ட ஈட்டுக் கடிதம்	2. பொருளின் உரிமையினை துறைமுகத்தில் உறுதிசெய்ய
C. கப்பல் தளச்சீட்டு	3. விவசாய உற்பத்திகளின் பாவனைப் பொருத்தப்பாட்டினை உறுதிசெய்ய
D. சுகநல சான்றிதழ்	4. வரிச்சலுகைகளினை பெறுவதற்கு
E. சுமைச்சீட்டு	5. குற்றமுடைய சுமைச்சீட்டிற்கு பதிலாக தூய சுமைச்சீட்டினைப் பெறுவதற்கு

X இற்கும் Y இற்குமான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A – 1, B – 4, C – 2, D – 5, E – 3
(2) A – 2, B – 1, C – 4, D – 3, E – 5
(3) A – 3, B – 2, C – 5, D – 1, E – 4
(4) A – 4, B – 5, C – 1, D – 3, E – 2
(5) A – 5, B – 3, C – 4, D – 2, E – 1 (……..)

16) அண்மையில் க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அதிபர் ஒருவர் பின்வரும் கருத்தினை முன்வைத்தார். "நீங்கள் ஒவ்வொருவரும் சரியான பாடநெறிகளை உயர்தரத்திற்காக தெரிவு செய்வீர்களாயின், உத்தேச நோக்கங்களை திட்டமிட்டவாறே குறித்தகால வரையறையினுள் உச்சதரத்துடன் அடைந்து கொள்ள முடியும்"

மேற்படி கருத்தின் ஊடாக அதிபர் எடுத்துக் கூறிய முகாமைத்துவ எண்ணக்கரு எதுவென நீர் கருதுகின்றீர்?

(1) செயற்திறன் (2) பயனுறுதி (3) வினைத்திறன்
(4) உற்பத்தித்திறன் (5) இலாபமீட்டும் திறன் (……..)

17) பின்வரும் அட்டவணையில் X நிரலானது தீர்மானமெடுத்தல் படிமுறைகளினையும் Y நிரலானது அதனுடன் தொடர்புடையதாக தற்போது அதிகரித்து வரும் எரிபொருள் நெருக்கடி தொடர்பிலான செயற்பாட்டுத் தகவல்களினையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. பிரச்சனைகளை இனம் காணல்.	1. மிக விரைவாகவே வாகன உடமையாளர்கள் துரித துலங்கல் குறியீட்டில் (QR) பதிவினைச் செய்து நடவடிக்கைகளை கண்காணித்தல.
B. மாற்றுத் தீர்வுகளை இனம் காணல்.	2. துரித துலங்கல் (QR Code) குறியீட்டின் ஊடாக பங்கீட்டினை முன்னெடுக்க தீர்மானித்தல்.
C. மாற்றுத் தீர்வுகளை மதிப்பிடல்.	3. பங்கீடு தொடர்பிலான ஆலோசனைகளை உயர் மட்ட செயற்குழுவில் முன்னுரிமை அடிப்படையில் ஆராய்தல்.
D. சிறந்த மாற்றுத் தீர்வினை தெரிவு செய்தல்.	4. எரிபொருள் பெறுவதற்கு வாகனங்களது வரிசை வீதிகளில் அதிகரித்துச் செல்லுதல்.
E. தீர்மானத்தை அமுல்படுத்தல்.	5. பெறப்பட்ட ஆலோசனைகளை உயர் மட்ட செயற் குழுவில் பகுத்தாராய்தல்.

X இற்கும் Y இற்கும் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A – 1, B – 2, C – 4, D – 3, E – 5
(2) A – 4, B – 3, C – 5, D – 2, E – 1
(3) A – 2, B – 1, C – 3, D – 5, E – 4
(4) A – 5, B – 1, C – 4, D – 3, E – 2
(5) A – 4, B – 2, C – 3, D – 1, E – 5 (……..)

18) நிறுவனமொன்றின் முகாமையாளர் தனது நிறுவனத்தில் பணியாற்றும் நடுத்தரமட்ட முகாமையாளர்களுடானான தரக்கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் பின்வரும் கருத்தினை வலியுறுத்தினார்.

"பிரச்சினைகளைத் தேடுவதை விட தோன்றக் கூடிய பிரச்சினைகளை தடுப்பதே சிறந்தது" எனக் குறிப்பிட்டார். இவரால் எடுத்துக் கூறப்பட்ட தரக்கட்டுப்பாட்டு நுட்பம் எதுவென நீர் கருதுகின்றீர்?

(1) தர உறுதி (2) தர வட்டம் (3) தர நியமம்
(4) பூச்சிய வழு (5) புள்ளி விபர செயன்முறைக் கட்டுப்பாடு (……..)

19) செயற்பாட்டு முகாமைத்துவத்தில் உற்பத்தி முறைகளினது பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.

A. உற்பத்திச் செயற்பாடுகளை அடிக்கடி மாற்ற வேண்டி இருத்தல்.

B. நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளை நாளின் இறுதியில் காண முடிவதில்லை.

C. நுகர்வோர் திருப்தியினை உச்சமட்டத்தில் பேணக் கூடியதாக இருத்தல்.

D. உற்பத்திகள் ஒரு சிலருக்கு ஒருசில என்ற அடிப்படையில் இடம்பெறும்.

E. தனிநபர் ஒருவராலேயே உற்பத்திகளை கட்டுப்படுத்த முடிதல்.

F. அலகு கிரயம் மிக உயர்வாக இருத்தல்.

மேற்கூறப்பட்டனவற்றில் பாய்ச்சல் உற்பத்தியின் பண்புகளினை மட்டும் கொண்டுள்ள தொகுதி எது?

(1) A, D, F (2) A, B, D (3) C, E, F

(4) C,F (5) B,E (……..)

20) உற்பத்தி நிறுவனமொன்றின் வருடாந்த நிலையான கிரயம் ரூபா 140,000 ஆக இருக்கும் போது அலகொன்றின் பங்களிப்பு ரூபா 12 ஆகவும், அலகு விற்பனை விலை ரூபா 30 ஆகவும் காணப்படுகின்றது. இந்நிறுவனம் குறித்த ஆண்டில் 28,000 அலகுகளை உற்பத்தி செய்கின்றதெனில், ஓர் அலகுக்கான அலகுக் கிரயம் மற்றும் கிடைக்கக் கூடிய இலாபம் என்பனவற்றினை சரியாக கொண்ட தெரிவு யாது?

(1) ரூபா 23, ரூபா 196,000

(2) ரூபா 18, ரூபா 644,000

(3) ரூபா 42, ரூபா 504,000

(4) ரூபா 5, ரூபா 840,00

(5) ரூபா 48, ரூபா 504,000 (……..)

21) முரண்பட்ட பண்புகளைக் கொண்ட முழுமையான சந்தையினை ஒத்த பண்புகளைக் கொண்ட குழுக்களாக வகைப்படுத்தி வேறுபடுத்துவது சந்தை துண்டமாக்கல் எனப்படும். இதன்படி பின்வரும் அட்டவணையில் X நிரலானது சந்தை துண்டமாக்கலின் அடிப்படைகளையும், Y நிரலானது அதனுள் அடங்கும் உப கூறுகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

X	Y
A. பூகோள ரீதியான காரணிகள்	1. சமூக வகுப்பு
	2. சனத்தொகை அடர்த்தி
B. சமூகவியல் காரணிகள்	3. மனப்பாங்கு
	4. வயது
C. உளவியல் காரணிகள்	5. வாழ்க்கைப்பாங்கு
	6. பிரதேசங்கள்
D. நடத்தை ரீதியான காரணிகள்	7. பால் வேறுபாடு
	8. நிகழ்வுகள்

X இற்கும் Y இற்குமான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

(1) A – 5,7 B – 1,8 C – 2,6 D – 3,4

(2) A – 3,8 B – 2,5 C – 6,7 D – 1,4

(3) A – 2,6 B – 4,7 C – 1,5 D – 3,8

(4) A – 7,4 B – 3,6 C – 1,8 D – 2,5

(5) A – 1,5 B – 2,8 C – 3,6 D – 4,7 (……..)

22) கூற்று A – உற்பத்திப்பொருட் கலவை மாறிகளில் விலை தவிர்ந்த ஏனைய மாறிகள் செலவுகளினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுண்டு.

கூற்று B – ஒரு உற்பத்தியில் ஏற்படும் நட்டத்தை பிறிதொரு உற்பத்தியினால் ஈடு செய்வதற்கு உற்பத்திப் பொருட் கலவை துணைபுரிவதுண்டு.

மேலே தரப்பட்ட இரண்டு கூற்றுக்களில்

(1) A சரியானது என்பதுடன், B தவறானதாகும்.

(2) A தவறானது என்பதுடன், B சரியானதாகும்.

(3) A,B ஆகிய இரண்டு கூற்றுக்களுமே தவறானவை.

(4) A,B ஆகிய இரண்டும் சரியானவை என்பதுடன் B யினூடாக A விபரிக்கப்படுகின்றது.

(5) A,B ஆகிய இரண்டும் சரியானவை என்பதுடன் B யினூடாக A விபரிக்கப்படவில்லை.

(……..)

23) பங்கு சந்தை தொடர்பிலான சில கூற்றுக்கள் வருமாறு.

A. கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தாது.

B. ஆரம்ப பொது வழங்கல், பருவ முதிர்வு பொது வழங்கல் என்பனவற்றின் ஊடாக கம்பனி பங்குகள் வழங்கப்படும்.

C. முதலீட்டாளர்களது கோணத்தில் கொள்வனவு, விற்பனை என்பன இடம்பெறும்.

D. கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்தும்.

E. முதலீட்டாளர்களது கோணத்தில் கொள்வனவு மட்டும் நடைபெறும்.

F. பங்குகளின் கைபரிமாற்றம் மட்டும் நடைபெறும்.

மேலே தரப்பட்டவற்றுள் முதலாம் தர பங்கு சந்தைக்கு மட்டும் உரித்தான தெரிவுகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?

(1) A,C,F (2) A,B,F (3) C,D,E (4) B,D,E (5) B,E,F (……..)

24) பட்டியற்படுத்தப்பட்ட பொதுக்கம்பனி தொடர்பாக பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

(1) உரித்து வழங்கல் செயற்பாட்டினால் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தில் மாற்றங்கள் இடம்பெறுவதில்லை.

(2) பங்காணைப்பத்திரம் ஒன்றினை கொள்வனவு செய்து வைத்துள்ள நபர் பங்கிலாபங்களைப் பெற முடிவதுண்டு.

(3) உரித்து வழங்கலினால் கம்பனியின் பங்குதாரர் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுண்டு.

(4) பங்குகளின் சந்தை விலை அதிகரித்தல் கம்பனியின் கூறப்பட்ட மூலதனத்தை அதிகரிப்பதுண்டு.

(5) ஒதுக்கங்களை மூலதனமாக்கல் செயன்முறையின் போது பங்குதாரர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட மாட்டாது. (……..)

25) நிறுவனமொன்றில் மிகை ஊழியர் பிரச்சனைகளை கையாளும் முறைகளாக பின்வருவனவற்றுள் எதனைக் கருத முடியாது.

(1) நிறுவன உற்பத்தி செயற்பாடுகளையும், கிளைகளையும் விஸ்தரித்தல்.

(2) வெளி மூலங்களாக பயன்படுத்தல்.

(3) மேலதிக நேர கொடுப்பனவுகளை வழங்கி மேலதிக வேலைகளை செய்வித்தல்.

(4) புதிய வேலைகளுக்கு மீள் பயிற்சி வழங்கல்.

(5) ஊழியர் சுயமாக ஓய்வு பெறுவதனை ஊக்குவித்தல். (……..)

26) ஊழியர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை இழிவளவாக்குவதற்கான மனிதவள முகாமைத்துவ கருமமாக பின்வருவனவற்றுள் எதனைக் குறிப்பிட முடியும்.

(1) ஒழுங்காற்று முகாமைத்துவம்

(2) ஊழியர் சேமநல நிர்வாகம்

(3) ஊழியர் அசைவு

(4) வேலை அறிமுகப்படுத்தல்

(5) மனக்குறைகளைக் கையாளல். (……..)

27) "எதிர்கால தொழில் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, தனிப்பட்ட ஊழியர்களை மையப்படுத்தாது நிறுவனத்தினை மையப்படுத்தியதாக நீண்ட கால வேலைத்திட்டங்களினை நடைமுறைப்படுத்த வேண்டும். இவை அதிக செலவினை ஏற்படுத்தும் எனினும் எண்ணக்கருத் திறன்களினை வளர்த்தெடுக்க இன்றியமையானதொன்றாகும்"
மேற்படி கூற்றில் குறிப்பிட்டதனை அடைவதற்கு நிறுவனத்தில் ஆற்றப்பட வேண்டிய மனிதவள முகாமைத்துவ கருமமாக நீர் எதனைக் கருதுகின்றீர்.
(1) பயிற்சி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
(2) அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
(3) ஊழியர் செயற்திறன் மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
(4) ஊழியர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
(5) தொழிற்சங்கங்களை வலுவூட்டல். (……..)

28) தகவல் முறைமையினைப் பாதுகாப்பதற்கு வணிகங்கள் பயன்படுத்தும் பாதுகாப்பு முறையொன்றாக கருதப்பட முடியாதது பின்வருவனவற்றுள் எதுவாகும்.
(1) இரகசியக் குறியீடு (2) தீச்சுவர் (3) காப்புநகல்
(4) நுணுக்குப்பன்னி (5) நச்செதிர்ப்பி (……..)

29) தரவு தயாரித்தல் செயன்முறைகளின் செயற்பாடுகளுக்குரிய சரியான விடையாக இருப்பது.
(1) வகைப்படுத்தல்/ தெரிவு செய்தல்/ இலத்திரனியல் இயந்திரம்/ பொழிப்பாக்கல்.
(2) தெரிவு செய்தல்/ கணிப்பிடுதல்/ பொழிப்பாக்கல்/ தரவு தயாரித்தல்.
(3) வகைப்படுத்தல்/ தெரிவு செய்தல்/ கணிப்பிடுதல்/ பொழிப்பாக்கல்.
(4) பொழிப்பாக்கல்/ தெரிவு செய்தல்/ கணிப்பிடுதல்/ தரவு தயாரித்தல்.
(5) கணிப்பிடுதல்/ வகைப்படுத்தல்/ தெரிவு செய்தல்/ பொழிப்பாக்கல். (……..)

30) எவ்வகையான வணிகம், அதனால் வழங்கப்படும் பொருள் அல்லது சேவைகள் தொடர்பான விபரங்கள், இதனால் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்கள் என்பனவற்றினை விபரிக்கும் வணிகத்திட்டத்தின் பகுதியாக கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எதுவாகும்.
(1) சந்தைப்படுத்தல் திட்டம்
(2) செயற்பாட்டுத் திட்டம்
(3) மனிதவள திட்டம்
(4) நிதித் திட்டம்
(5) வணிக விபரங்கள் (……..)

- **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களிலுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான சொற்களை இட்டு பூரணப்படுத்துக.**

31) அ) வணிகமொன்றின் விருத்திக்கும், விரிவாக்கத்திற்கும் ……………………………………………… அவசியமாக இருக்கும் அதேவேளை, இதனைப் பெறுவதற்கு காணப்படும் நிச்சயமற்ற நிலைமை ………………………….. எனக் கருதப்படுவதுண்டு.

ஆ) ……………………………………………………… உருவாக்குவதன் ஊடாக சிக்கலான ………………………………………... நிறைவு செய்தல், பொருளாதார வாழ்தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பாக கருத முடியும்.

32) அ) மத்திய வங்கி திறந்த சந்தையில் பிணைப்பத்திரங்களை விற்பனை செய்யும் போது பண வழங்கல் ………………………………. அதே நேரம், பிணைப்பத்திரங்களை கொள்வனவு செய்யும் போது பண வழங்கல் …………………………… செல்வதுண்டு.

ஆ) சந்தையொன்றில் நடைமுறையில் காணப்படும் கருத்துக்கு அமைய வணிகமொன்றினை ஆரம்பிப்பவர் ……………………………… என அழைக்கப்படுவதுடன், தனது கருத்திற்கு அமைய வணிகமொன்றினை ஆரம்பிப்பவர்.................................... என அழைக்கப்படுவதுண்டு..

33) அ) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட சகல பொதுக் கம்பனிகளுமே ……………………………….., ………………………………… என இரு வகையினுள் வகைப்படுத்தப்படுவதுண்டு.

ஆ) நாட்டில் நிலவிவரும் பணவீக்கத்தினால் பாதிக்கப்படக் கூடிய பணத்தின் கருமமொன்றாக ……………………………… காணப்படும் போது, பணவீக்கத்தினால் பாதிக்கப்படாத பணத்தின் கருமமாக ………………………………………… கருதப்படுவதுண்டு.

34) அ) உற்பத்திகளினை அதிகரித்து வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதன் ஊடாக …………………………………………… யிணைப்பேணுவதற்கு மத்திய வங்கி முற்படும் அதே வேளை, பொருளாதாரத்திற்கு ஈடு கொடுக்கக் கூடிய ஆற்றலினை …………………………………………… வழங்கி வருகின்றது.

ஆ) இலங்கையில் காப்புறுதிச் சேவையினை முறைமைப்படுத்தும் உச்ச மட்ட நிறுவனமாக …………………………………………….. காணப்படுகையில், போக்குவரத்து சேவையினை முறைமைப்படுத்தும் உச்ச மட்ட நிறுவனமாக …………………………………………… காணப்படுவதுண்டு.

35) அ) உள்நோக்கிய மற்றும் வெளிநோக்கிய போக்குவரத்து வழங்கல் சேவை ஆகிய இரண்டிற்குமான மையத்தரப்பினராக ………………………………. காணப்படுவதுடன் வசதிப் பொருட்களின் உற்பத்தியாளர் ………………………………. கொண்ட போக்குவரத்து வழங்கல் சேவையில் கரிசனை செலுத்துவதுண்டு.

ஆ) இறக்குமதி வியாபாரத்தில் வெளிநாட்டு வழங்குனர் ஒருவரை தெரிவு செய்த பின்னர், இறக்குமதியாளரால் ஏற்றுமதியாளருக்கு அனுப்பப்படும் ஆவணம் …………………………….. என்பதுடன், அதற்குப் பதிலாக ஏற்றுமதியாளரால் இறக்குமதியாளருக்கு அனுப்பப்படுவது …………………………… என்பதாகும்.

36) அ) றெபேட் எல்கேட்ஸ் என்பவரது சிந்தனை அடிப்படையில் முகாமையாளர் ஒருவர் குறித்த கருமம் தொடர்பில் சிறப்பறிவினைக் கொண்டிருப்பதுடன் உடனடியாகவே செயலாற்றும் ஆற்றலை ………………………………. திறன் வெளிக்காட்டும் அதே வேளை முழு நிறுவனத்தினையும் முறையாக வழி நடாத்தி தந்திரோபாய தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலை …………………………… திறன் வெளிக்காட்டுவதுண்டு.

ஆ) …………………………… இல்லாமல் கட்டுப்படுத்தல் செயன்முறை தொழிற்பட மாட்டாது என்பதுடன் கட்டுப்படுத்தல் செயன்முறையில் பெறுபேறுகளை அளவிடுவதற்கு உருவாக்கப்பட வேண்டியது ………………………… என்பதாகும்.

37) அ) இழிவு இருப்பு மட்டத்தினுள் பேணப்படும் மற்றுமோர் இருப்பு …………………………….. எனப்படுவதுடன், இருப்பு கட்டுப்படுத்தலில் இரு கட்டளைகளுக்கிடையிலான கால இடைவெளி ……………………………….. என அழைக்கப்படுவதுண்டு.

ஆ) தீர்மானிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக விலையை நிர்ணயிக்கும் போது ………………………….. அடிப்படையாய் அமையும் அதே வேளை, நடைமுறை விலையின் படி விலையினைத் தீர்மானிப்பதில் …………………………….. அடிப்படையாய் அமைவதுண்டு.

38) அ) நிலையான வட்டி வீதத்தினைப் பெற்றுத்தரக்கூடிய கம்பனியொன்றின் கடன் மூலதன கருவியாக ……………………………… காணப்படுகையில், நிலையான பங்குலாபங்களைப் பெற உரித்துடைய கருவியாக ……………………………… காணப்படுவதுண்டு.

ஆ) நிதிக்கருவிகளின் முதிர்வு காலத்தினை அடிப்படையாகக் கொண்டு, நிதிச்சந்தையினை ……………………, ……………………………… என இருவகைப்படுத்தி விட முடிவதுண்டு.

39) அ) நிறுவனமொன்றில் கணக்கு உதவியாளர் ஒருவரை நியமிக்கும் பொருட்டு, அப்பணி தொடர்பில் விளக்கிக் காட்டுவது ……………………………………………… எனவும், அமர்த்தப்படும் கணக்குதவியாளருக்கு இருக்கவேண்டிய தகுதியினை விபரிப்பது ……………………………………….. எனவும் அழைக்கப்படும்.

ஆ) மனித வள முகாமைத்துவத்தில் வேலைகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை கவருகின்ற செயன்முறை ……………………………….. என அழைக்கப்படும், அதேநேரம் வந்து சேர்ந்த விண்ணப்பங்களிலிருந்து பொருத்தமான விண்ணப்பதாரர்களை இனம் காணும் செயன்முறை ………………………….. எனவும் கருதப்படுவதுண்டு.

40) அ) பிரதான வீதிகளின் மையத்தில் ஒளிரும் வீதி சமிக்ஞைகள் ……………………………….. பொருளாக கருதப்படுகையில், கணினி மையச் செயற்பாட்டு அலகு ………………………… பொருளாக கருதப்படுவதுண்டு.

ஆ) செயற்பாட்டுக் கருமங்களை ஆரம்பிப்பதற்கு முன்னரான செலவுகள் ………………………….. செலவுகள் எனவும் செயற்பாட்டு இலாபத்திலிருந்து ………………………….. கழிக்கப்பட்ட பின்னர் கிடைப்பது வரிக்கு பிந்திய இலாபம் எனவும் அழைக்கப்படும்.

- **41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) “ஒரு வணிகத்தை பல்வேறு முறைகளில் வகைப்படுத்த முடியும்”, அவ்வாறு வகைப்படுத்தத்தக்க வேறுபட்ட நியதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

(3) ……………………………………………………………………………………………………

(4) ……………………………………………………………………………………………………

42) முயற்சியாண்மைக்கும், பொருளாதார விருத்திக்கும் இடையிலான தொடர்பினை பின்வருமாறு விளக்கப்படம் ஒன்றின் மூலம் காட்ட முடியும் அதன்படி இதில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.



43) தன்னியக்க வங்கிச் சேவைகள் மூலம் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் நான்கு நன்மைகளினைத் தருக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

(3) ……………………………………………………………………………………………………

(4) ……………………………………………………………………………………………………

44) பின்வரும் ஒவ்வொரு கூற்றினையும் அடிப்படையாகக் கொண்டு உரிய முகவர்களின் வகையினைக் குறிப்பிடுக.

கூற்று	முகவர்
(1) முதல்வர் சார்பில் பொருட்களை கடனுக்கு விற்பனை செய்து அக்கடன் பணத்தை அறவிட்டுக் கொடுப்பவர்	………………………..
(2) முதல்வருக்கு அனுகூலமாகும் வகையில் தனது விருப்பத்தின் அடிப்படையில் முதல்வர் சார்பாக பொருட்களை கொள்வனவு, விற்பனை செய்பவர்.	………………………..
(3) முதல்வரின் சார்பாக பொருட்களைச் கொள்வனவு செய்யும் பொழுது அல்லது விற்கும் பொழுது அவற்றை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்பவர்.	………………………...
(4) கொடுக்கல் வாங்கல்களுக்கு அமைய கொள்வனவாளரையும், விற்பனையாளரையும் தொடர்புபடுத்துபவர்.	………………………...

45) முகாமைத்துவ கருமங்களுக்கும் Robert .L. Kerts என்பவரின் முகாமைத்துவ திறன்களுக்கும் இடையிலான தொடர்பினைக் கொண்ட பின்வரும் அட்டவணையில் உள்ள இடைவெளிகளை பூரணப்படுத்துக.

முகாமைத்துவ திறன்கள் / முகாமைத்துவ கருமங்கள்	எண்ணக்கருத்திறன்	மானிடத்திறன்	தொழில்நுட்பதிறன்
திட்டமிடல்	எதிர்காலம் பற்றி சிந்திப்பதற்கு	(1) ………..........	ஆய்வு நடவடிக்கைகளுக்கு
ஒழுங்கமைத்தல்	(2)………………… ………………...	இணைந்து பணியாற்ற	மேற்பார்வை
நெறிப்படுத்தல்	(3)………………… ………………..	ஊக்கப்படுத்தல்	தொடர்பாடல்
கட்டுப்படுத்தல்	இலக்குகள் அடைவதனை உறுதிசெய்ய	செயற்பாடுகளை மதிப்பிட	(4) ………………………... ………………………...

46) பேனா (Pen) ஒன்று தொடர்பில் ஐந்து மாணவர்களின் கூற்றுக்களினைக் கொண்டு அக் கூற்றுக்களுக்கு பொருத்தமாக உற்பத்தியாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி மட்டங்களினை அருகே குறிப்பிடவும்.

கூற்றுக்கள்	உற்பத்தி மட்டம்
A. மைகொண்ட குழாய், மூடி, பிடிமானம் வசதியாக இருத்தல்	(1)………………………………
B. எழுதும் போது மெல்லிய நறுமணம் வெளிவருகின்றது.	(2) ……………………………...
C. பரீட்சை எழுதுவதற்கே போனாவினை கொள்வனவு செய்தேன்.	(3)………………………………..
D. தெளிவாக எழுதுவதுடன் நீடித்த பாவனை கொண்டுள்ளது.	(4)………………………………..

47) நிதி விகிதப்பகுப்பாய்வு தொடர்பிலான இரண்டு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று A - நிறுவனத்தின் உரிமை மூலதனத்திற்கும் கடன் மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பினை சுட்டிக்காட்டும்.

கூற்று B - குறுங்கால நிதி கடப்பாடுகளுக்கு முகம் கொடுப்பதான இயலுமையைச் சுட்டிக்காட்டும்.

மேலே தரப்பட்ட கூற்றுக்களிலிருந்து அவைஒவ்வொன்றும் எத்தகைய நிதி விகிதங்கள் எனவும், அவற்றுள் அடங்கும் விகிதங்களுக்கு ஒவ்வோர் உதாரணமும் தருக.

கூற்று	நிதி விகிதம்	உதாரணம்
A	(1)……………………………………	(3) ……………………………………
B	(2)……………………………………	(4) ……………………………………

48) நிறுவன மனிதவள முகாமைத்துவக் கருமங்கள் யாவற்றினதும் ஒட்டுமொத்த வெற்றியினை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய நான்கு நியதிகளைக் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………

(3) ……………………………………………………………………………………………

(4) ……………………………………………………………………………………………

49) பின்வரும் கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமைகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

(1) உற்பத்திப் பிரிவு - ……………………………………………………………………

(2) சந்தைப்படுத்தல் பிரிவு - ……………………………………………………………………

(3) நிதிப் பிரிவு - ……………………………………………………………………

(4) மனிதவளப் பிரிவு - ……………………………………………………………………

50) களஞ்சியசாலைகளில் பொருட்களை இடத்திற்கு இடம் மாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் பின்வரும் நவீன உபகரணங்களின் பெயரினை அருகே குறிப்பிடவும்.

(1)

……………………………………………………………………

(2)

……………………………………………………………………

(3)

……………………………………………………………………

(4)

……………………………………………………………………

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru
6th Term Examination - 2022

FWC

வணிகக்கல்வி - II Business Studies - II	Three Hours and ten minutes Gr. 13 (2022)	32	T	II

❖ வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :-

❖ **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி I

01. அபிசாந், ஜான்சறோன் ஆகிய இருவரும் தற்போது நாட்டில் நிலவி வரும் உணவுப்பொருட்களுக்கான தட்டுப்பாடு, விலையேற்றம் என்பனவற்றுக்கு தீர்வாக, “உனக்கான உணவு உற்பத்தி உன் வீட்டிலிருந்தே” என்ற மகுடவாசகத்தின் கீழ் வீட்டுத்தோட்டச் செய்கையினை, கிடைக்கும் வளங்களைக் கொண்டு மேற்கொள்வதனை ஊக்குவிக்கும் நோக்கில், “வடக்கின் விவசாய உற்பத்திக் கம்பனி” (Northern Agro Product Co) என்பதனை உருவாக்கி விதைகள், பசளைகள், கிருமி நாசினிகள் உபகரணங்கள் என்பனவற்றை மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்வதுடன், விற்பனைக்கு பிந்திய சேவைகளாக தொடர்ச்சியான கண்காணிப்பு, ஆலோசனைகள், விளைபொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுக்கின்றனர். ஐம்பதிற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றும் இந்நிறுவனத்தில் பிரதேசரீதியாக அவர்களுக்கிடையே பணிகள் பங்கிடப்பட்டுள்ளன எனினும் தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் கிருமிநாசினி, உரம் எரிபொருள் பற்றாக்குறை என்பன குறித்த வணிக செயற்பாட்டிற்கு பாதிப்புக்களை ஏற்படுத்திய வண்ணம் உள்ளது.

1) அ) வரையறுத்த வடக்கின் விவசாய உற்பத்திக் கம்பனியினை வணிகமென்றாக கருதுவதற்கு அதில் காணப்படத்தக்க எவையேனும் நான்கு பண்புகளைச் சுட்டிக் காட்டுக.

ஆ) கம்பனியின் வெளியீடுகளை கட்புலத்தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்துவதுடன், அவற்றுக்கு உதாரணங்கள் தருக.

2) மேற்குறித்த கம்பனியின் உருவாக்கம் மூலம் பிராந்தியத்திற்கு கிடைக்கும் சமூக பொருளாதார முக்கியத்துவங்கள் நான்கினைத் தருக.

3) அ) மேற்படி வணிகம் பதிவு செய்யப்பட வேண்டியசட்டத்தினைக் குறிப்பிட்டு பதிவு செய்வதற்கான காரணத்தையும் தருக.

அ) மேற்படி வணிகத்தில் காணப்படும் இருவாய்ப்புக்களையும் இரு அச்சுறுத்தல்களையும் தருக.

4) மேற்படி கம்பனியினது வணிக நடவடிக்கைகள் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய விசைகள் நான்கினைக் குறிப்பிட்டு, அவ்விசைகள் செல்வாக்கு செலுத்துவதற்கான தலா ஒரு காரணத்தினையும் குறிப்பிடுக.

5) “ஊழியர்களுக்கு பணிகள் பங்கிடப்பட்டுள்ளன” என்பதன் மூலம் நீர் கருதும் வணிக எண்ணக்கரு யாது எனக் குறிப்பிடுவதுடன், இதன் ஊடாக வணிகத்திற்கும் ஊழியர்களுக்கும் கிடைக்கும் தலா இரு நன்மைகளைக் குறிப்பிடுக.

(5x4 = 20 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

02. 1) தற்போதைய தொடர்ச்சியான மின்வெட்டு நிலைமைகள் காரணமாக சூரிய சக்தியினை சேமித்து பயன்படுத்தக்கூடிய சூரிய மின்கலப்பாவனை (Solar System) தொடர்பில் நாடு தழுவிய ரீதியில் அதிக கேள்வி நிலவுவதனைக் கருத்தில் கொண்ட, பொறியியல் தொழில்நுட்பத்தினை கற்றுத்தேறிய சபீன் என்பவர், சூரிய மின்கலங்களை வீடுகள் அலுவலகங்களில் பொருத்தும் வணிகமொன்றை ஆரம்பிக்க எண்ணுகின்றார்.

அ) மேற்படி வணிகம் பின்பற்றக் கூடிய பின்வரும் வணிக ஒழுக்க நெறிகளுக்கு ஒவ்வோர் உதாரணம் நீர்கற்றவற்றினைக் கொண்டு தருக.

- உற்பத்தி தொடர்பான ஒழுக்கநெறி
- சந்தைப்படுத்தல் தொடர்பான ஒழுக்கநெறி
- நிதி முகாமைத்துவம் தொடர்பான ஒழுக்கநெறி
- மனிதவளம் முகாமைத்துவம் தொடர்பான ஒழுக்கநெறி

ஆ) தற்போதைய பொருளாதார நிதிநெருக்கடி மற்றும் பொருட்களுக்கான தட்டுப்பாட்டு நிலைமைகளில் உமது பிரதேசத்தில் இடம்பெற்ற முறையற்ற வியாபார நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிடுக.

2) அ) ''அரசிற்கும் வணிகத்திற்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பொன்றைப் பேணிக்கொள்வது மிக முக்கியமானதாகும்'' மேற்படி கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? விளக்குக.

ஆ) அரசின் நிதிக்கொள்கை கருவிகளில் ''கடன் கட்டுப்பாடு'' மிக முக்கியமான ஒன்றாகும் இதில் பயன்படுத்தும் அளவு ரீதியான கடன் கட்டுப்பாட்டிற்கு இரு உதாரணங்கள் தருக.

3) ''பங்குடமை வணிகமொன்றில் அனுகூலங்கள் காணப்படுவது போன்றே, சில வரையறைகளும் காணப்படுவதுண்டு''

அ) பங்குடமை வணிகத்தில் காணப்படும் நான்கு அனுகூலங்களினைத் தருக.

ஆ) பங்குடமை ஒப்பந்தம் ஒன்று பங்குடமையின் வாழ்தன்மையில் ஏற்படுத்தும் முக்கிய இரு தாக்கங்களினைக் குறிப்பிடுக..

4) ''முயற்சியாண்மையினூடாகவும், வணிகங்கள் மூலமும் மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்வதற்கான கருமங்கள் இடம்பெறுவதுண்டு''

அ) முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை விளக்குக.

ஆ) முயற்சியாண்மைக்கும் வணிகத்திற்கும் இடையில் நீர் எத்தகைய தொடர்பினை காணுகின்றீர் விளக்குக.

5) ''சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாண்மை முக்கியம் பெறுவதுண்டு'' இதன்படி எவ்வாறு சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் வெற்றிக்கு முயற்சியாண்மை பங்களிக்கும் என்பதற்கு நான்கு உதாரணங்களைத் தருக.

(5x4 = 20 புள்ளிகள்)

03. 1) அ) இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களின் மேம்பாட்டிற்கு தொழிற்பட்டுவரும் நான்கு அரச நிறுவனங்களைக் குறிப்பிடுக.

ஆ) நிதிக்கருவிகவிகளினை விற்பனை செய்யும் இடைநடுவர்களில் ஒருவராகிய முதலீட்டு முகாமையாளர்களினால் வழங்கப்படும் நான்கு சேவைகளைக் குறிப்பிடுக.

2) அ) உத்தரவு பெற்ற வணிக வங்கிக்கும், உத்தரவு பெற்ற விசேட வங்கிக்கும் இடையே நீர்காணும் இரு ஒற்றுமைகளினையும், இரு வேறுபாடுகளினையும் தருக.

ஆ) இன்று உத்தரவுப்பத்திரம் பெற்ற வணிகவங்கிகள் போட்டியின் நிமித்தம் பெருமளவு வாடிக்கையாளர் சார்பான பிரதிகர்த்தா சேவைகள் பலவற்றை வழங்கி வருகின்றன அத்தகைய நான்கு சேவைகளினைக் குறிப்பிடுக.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

3) அ) காசோலையில் புறக்குறிப்பிடல் என்பதனால் கருதப்படுவது யாது?
ஆ) புறக்குறிப்பிடல் மேற்கொள்ளளப்படும் இரு சந்தர்ப்பங்களினைத் தருக.

4) அ) மறு காப்புறுதி (Re – Insurance) என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.
ஆ) மறு காப்புறுதியின் மூலம் காப்புறுதிக் கம்பனிகளுக்கும் காப்புறுதி செய்பவருக்கும் கிடைக்கும் தலா இரு அனுகூலங்களைத் தருக.

5) அ) வாய்மொழி மூலதொடர்பாடல் சில சமயங்களில் தோல்வியடைவதுண்டு. இவ்வாறு தோல்வியடைவதற்கான நான்கு காரணங்களினைத் தருக.
ஆ) வணிக நடவடிக்கைகளின் வெற்றிக்கு தொடர்பாடலின் முக்கியத்துவங்கள் நான்கினைத் தருக.

(5x4 = 20 புள்ளிகள்)

04. 1) தொடர்பாடல் செயன்முறையில், நபர் தவிர்ந்த மற்றய நான்கு அடிப்படைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

2) அ) இலத்திரனியல் பணத்தினூடாக கொடுக்கல் வாங்கலைத் தீர்க்கும் போது தொடர்புபடும் நான்கு தரப்பினரைக் குறிப்பிடுக.
ஆ) வணிக வங்கிகளினால் வழங்கப்படும் இலத்திரனியல் அட்டைகளை கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்துவதனால் கிடைக்கும் தலா இரு அனுகூலங்களையும், இரு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

3) "உள்நாட்டு வியாபாரத்தில் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் விநியோக வழிமுறைகளில் ஈடுபடும் தரப்பினரே இடை நடுவர்கள் என்பதாகும்."
அ) உள்நாட்டு வியாபாரத்தில் இடைநடுவர்களாக தொழிற்படும் நான்கு தரப்பினரைக் குறிப்பிடுக.
ஆ) வியாபாரத்தில் இடை நடுவர்களைப் பயன்படுத்துவதன் இரு அனுகூலங்களையும், இரு பிரதிகூலங்களையும் தருக.

4) "வெளிநாட்டு வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்களில் சுமைச்சீட்டு முக்கியமானதொன்றாகும்"
அ) கப்பற் கம்பனிகளால் வழங்கப்படும் சுமைச்சீட்டின் இருவகைகளினையும் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
ஆ) சுமைச்சீட்டு பயன்படுத்துவதன் நான்கு நோக்கங்களினைத் தருக.

5) சர்வதேச அமைப்புக்களும், வியாபார ஒப்பந்தங்களும் வெளிநாட்டு வியாபாரத்தில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இதன்படி நாடொன்றிற்கு ஏற்படும் சாதகமான தாக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(5x4 = 20 புள்ளிகள்)

பகுதி – II

05. 1) தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமையில் அரசு நாளாந்தம் ஒரு சில மணித்தியாலயங்கள் மின் துண்டிப்பினை மேற்கொண்டுவருவதனால், தனது மூலப்பொருள் மற்றும் முடிவுப்பொருட்கள் பழுதடைவதனை உணர்ந்த குளிர்பான உற்பத்தி நிறுவனமொன்றின் உரிமையாளர் இதற்கு தீர்வாக தன்னியக்க மின் பிறப்பாக்கி ஒன்றினை கொள்வனவு செய்வதா அல்லது சூரியசக்தி மூலமாக மின்சக்தியினை பெறுவதா என சிந்திக்கின்றார்.
அ) பிரச்சனை என்பதனை விளக்குவதுடன், மேற்படி வணிகத்தில் உரிமையாளர் எதிர்கொள்ளும் பிரச்சனை யாதென குறிப்பிடுக.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஆ) மேற்படி பிரச்சனைக்கு தீர்வாக தீர்மானம் ஒன்றினை எடுத்து வெற்றிகரமாக அமுல்படுத்த வேண்டுமாயின் அத்தீர்மானம் கொண்டிருக்க வேண்டிய அம்சங்கள் யாவை?

2) அ) நிறுவனமொன்றின் சகலமட்ட முகாமையாளர்களிடமும் சம அளவில் தேவைப்படும் மானிடத்திறனில் அடங்கியுள்ள நான்கு ஆற்றல்களினைக் குறிப்பிடுக.

ஆ) வணிகமொன்றின் முகாமையாளர் அதிகாரங்களை மையப்படுத்தி முகாமைப்பணிகளை மேற்கொள்கின்றார். இதன் மூலம் அவர் எதிர்நோக்கக்கூடிய சவால்கள் நான்கினைத் தருக.

3) அ) முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் செயன்முறையின் பிரதான படிமுறைகளினைக் குறிப்பிடுக.

ஆ) கட்டுப்பாட்டுச் செயன்முறையின் முக்கியத்துவங்கள் நான்கினைத் தருக.

4) உற்பத்திக் கட்டுப்பாட்டு நுட்பங்களில் பிரதானமான ஒன்றே இருப்புக் கட்டுப்பாடு என்பதாகும்.

அ) இருப்புக் கட்டுப்பாட்டின் நான்கு முக்கியத்துவங்களினைத் தருக.

ஆ) உரிய நேர தந்திரோபாய முறைமையின் (JIT) அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

5) வணிக நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி அபிவிருத்தி முக்கியமாக அமைவதற்கான நான்கு காரணங்களினைத் தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

06. 1) அ) செயல் முகாமைத்துவத்தில் இருப்புத் தொடர்பான மொத்தக்கிரயத்தின் இரு கூறுகளையும் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் தலா இரு உதாரணங்களைத் தருக.

ஆ) கீழே தரப்பட்டுள்ள தகவல்களினைப் பயன்படுத்தி பொருள் x இற்கான பொருளாதாரக் கட்டளைக் கணியத்தினைக் கணிப்பிடுக.

ஆண்டுக்குரிய நுகர்வு 12000 அலகுகள்
அலகுக்கிரயம் ரூபா 100
கட்டளை ஒன்றுக்கான கட்டளைக்கிரயம் ரூபா 300
அலகொன்றுக்கான ஆண்டுக்குரிய பேணிவைத்தற்கிரயம் ரூபா 5

2) "சமமான தேவைகள் விருப்பங்களுடன் கூடிய பரிமாற்றுச் செயன்முறையினால் திருப்திப்படுவதற்கான விருப்பமும் ஆற்றலும் உள்ள சாத்தியமான கொள்வனவாளர்களின் கூட்டு சந்தை ஆகும்"

அ) இன்றைய நவீன பரிமாற்றுப் பொருளாதாரத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சந்தைகளில் எவையேனும் நான்கு வகைகளினைத் தருக.

ஆ) வணிகர்களுக்கு சந்தைப்படுத்தலின் முக்கியத்துவங்கள் நான்கினைத் தருக.

3) "பொருள் ஒன்றின் வாழ்க்கைச் சுற்றோட்டத்தில் விற்பனையாளர்களினால் பல்வேறு உபாயவழி முறைகள் பின்பற்றப்படுவதுண்டு."

அ) பொருள் அறிமுக கட்டத்தின் போது பின்பற்றப்படக் கூடிய உபாயவழி முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

ஆ) சில உற்பத்திப் பொருட்கள், உற்பத்திபொருள் வாழ்க்கைச் சுற்றோட்டத்தின் அனைத்துக் கட்டங்களினையும் கடந்து செல்லாது முதல் ஓர் இரு கட்டங்களுடனேயே சந்தைகளை விட்டு வெளியேறிவிடுவதுண்டு. இவ்வாறு வெளியேறிவதில் செல்வாக்கும் செலுத்தும் நான்கு காரணிங்களைக் குறிப்பிடுக.

4) "சந்தைப்படுத்தல் கலவை மாறிகளில் விலை தனித்துவமான ஓர் மாறியாகும்"

அ) விலை என்பதனை வரையறுத்து ஏன் இம்மாறி தனித்துவமானது என்பதற்கான காரணத்தினையும் தருக.

ஆ) விலை குறித்தலுக்கான எவையேனும் நான்கு நோக்கங்களினைத் தருக.

5) ''ஒன்றுடனொன்று தொடர்புடைய நிதி முகாமைத்துவ கருமங்களை தொடர்ச்சியாக நிறைவேற்றிச்செல்வதன் ஊடே, நிதி முகாமையின் அடிப்படை நோக்கம் எட்டப்பட முடிவதுண்டு''
மேற்படி கூற்றினை வலியுறுத்தும் வகையில் நிதி முகாமைத்துவ கருமங்களை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

(5x4 = 20 புள்ளிகள்)

07. 1) அ) ஒரு பொதுவரையறுக்கப்பட்ட கம்பனியொன்று, நிதிதிரட்டுவதற்காக உரிமை மூலதனத்தினை விட, கடன் மூலதனத்தினை திரட்டுவதில் ஆர்வமாக உள்ளது. இதற்கான நான்கு காரணங்களை முன்வைக்குக.

ஆ) உள்ளக நிதியீட்ட வழிமுறைகளில் அனுகூலங்கள் காணப்படுவது போன்றே பிரதிகூலங்களும் காணப்படுவதுண்டு. இதன்படி உள்ளக நிதியீட்ட வழிமுறைகளின் இரு அனுகூலங்களையும் இரு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.

2) அ) கம்பனியொன்றின் பங்குவிலை அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

ஆ) முதலீட்டாளர் ஒருவருக்கு பங்கு விலைச்சுட்டிகள் முக்கியத்துவமுடையதாய் அமைவதற்குரிய நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

3) ''திரவத்தன்மைக்கும் இலாபத்தன்மைக்கும் இடையில் பொருத்தமான முடிவொன்றைப் பேணுதலிலேயே நிறுவனமொன்றின் வெற்றி தங்கியிருப்பதாக கருதப்படும்''
மேற்படி கூற்று தொடர்பில் வணிக வங்கி ஒன்றினை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

4. அ) மனிதவள முகாமைத்துவத்தில் ''வேலை வடிவமைப்பு'' (Job Design) என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக.

ஆ) வேலை வடிவமைப்பில் கருத்தில் கொள்ளப்படும் பணிகள் (Task), கடமை (Duties), பொறுப்பு (Responsibilities) ஆகிய எண்ணக்கருக்களை தனித்தனியே விளக்குக.

5) அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்லும் கேள்வியினை ஈடுசெய்வதற்காக உற்பத்தியினை விஸ்தரிக்கும் நோக்கில் பணிகளினை முன்னெடுக்கும் நிறுவனமொன்று பற்றாக்குறை ஊழியர் பிரச்சினையினை எதிர் கொள்கின்றது. இதனை தவிர்ப்பதற்கு கைக்கொள்ளக் கூடிய உடனடி மாற்றுத் தீர்வுகள் நான்கினை முன்வைக்குக.

(5x4 = 20 புள்ளிகள்)

08. 1) அ) மனித வள முகாமைத்துவத்தில் தொழில் பிணக்குத் தொடர்பில் ''கூட்டு ஒப்பந்தம்'' என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) கூட்டு ஒப்பந்தம் மூலமாக தொழில் வழங்குனருக்கும் ஊழியருக்கும் கிடைக்கும் தலா இரு நன்மைகளினைத் தருக.

2) தரவுகளுக்கும், தகவல்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை பின்வரும் தலைப்புக்களின் கீழ் வேறுபடுத்திக் காட்டுக.

- தகவல் செயன்முறை
- தீர்மானம் எடுத்தல்
- பெறுமதி
- தரவு ஒழுங்கமைத்தல்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

3) பின்வரும் வணிகத்தகவல் முறைமை தொடர்பிலான அட்டவணையில் வணிகமொன்றின் முக்கிய சில தகவல்களும் அவற்றை வகைப்படுத்துவதற்கான பிரதான மூன்று நியதிகளும் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான வகைப்படுத்தல் கூறுகளை இட்டு அட்டவணையினை பூரணப்படுத்துக.
(உமது விடைத்தாளில் இலக்கங்களினைக் குறிப்பிட்டு விடையினை எழுதுக.)

வணிகத்தகவல்கள்		பயன்பாட்டு மட்டத்திற்கமைய	பயன்பாட்டிற்கு அமைய	முகாமைத்துவ தொழிற்பாட்டிற்கமைய
அ)	நீண்ட காலநிதியீட்டம்	1) ……………..	நிறைவேற்று ஆதார முறைமை	நிதி முகாமைத்துவம்
ஆ)	புதிய உற்பத்தி அறிமுகம்	செயற்பாட்டு மட்டம்	2) ………………...	3) ……………………
இ)	அடுத்தாண்டு இடமாற்றம் பெறும் ஊழியர்	4) …………….	அலுவலக தன்னியக்க முறைமை	5) …………………….
ஈ)	பொருளாதார கட்டளைக் கணியம்	6) …………….	தீர்மான ஆதார முறைமை	செயற்பாட்டு முகாமைத்துவம்
உ)	கவர்ச்சிகரமான பொதி தொடர்பான ஆய்வு	7) ……………..	அறிவுப்பனி முறைமை	8) …………………...

4)) குறிப்பிட்ட காலப்பகுதியொன்றினுள் உற்பத்தி செய்வற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்காக ஏற்க வேண்டியதான கிரயம் எவ்வாறு அழைக்கப்படுமென குறிப்பிட்டு, அதன் வகைகள் யாவற்றினையும் வகைப்படுத்திக் காட்டுக.

5) ஏற்கனவே தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் வணிகமொன்று எத்தகைய சந்தர்ப்பங்களில் வணிகத்திட்டத்தினை தயார் செய்ய வேண்டிய தேவை ஏற்படுவதுண்டு. என்பதற்கான நான்கு காரணங்களைத் தருக.

(5x4 = 20 புள்ளிகள்)